Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 1






35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 08 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் April 15, 2025

# கனடிய மத்திய அரசிற்கான பொதுத்தேர்தல் – 2025

கனடிய மத்திய அரசிற்கான பொதுத் தேர்தல் 2025 ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. கனடியப் பிரதமராக இருக்கும் மார்க் காணியின் கோரிக் கையை கனடிய ஆளுநர் மேரி சைமன் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து மார்ச் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப் பட்டு 45ஆவது கனடிய நாடாளுமன்றத் திற்கான உறுப்பினர்களைத் தேர்ந் தெடுக்கும் தேர்தல் 36 நாட்களில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாடு முழுவதும் 343 தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டு இம்முறை தேர்தல் நடைபெற இருக்கிறது. இதில் 172 ஆசனங்களைப் பெறும் கட்சி பெரும்பான்மை அரசை அமைக்கும் தகுதிபெறும்.

| மார்ச் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும்போது கட்சிகளது நிலை | |
|---|---|
| லிபரல் கட்சி | 152 |
| பழமைவாதக்கட்சி | 120 |
| புளக்குவிபெகுவா கட்சி | 33 |
| புதிய ஜனநாயகக் கட்சி | 24 |
| பசுமைக்கட்சி | 2 |
| சுயேட்சை உறுப்பினர்கள் | 3 |
| வெற்றிடம் | 4 |
| மொத்தம் | 338 |

2021 செப்ரெம்பரில் நடைபெற்ற 44ஆவது கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலின் போது நாடு முழுவதும் 338 தொகுதிகளே இருந்தன. அப்போது நடைபெற்ற தேர்தலில் லிபரல் கட்சி அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் அது பெரும்பான்மை அரசை அமைக்கக்கூடிய அளவு ஆசனங்களைப் பெறவில்லை. அத்துடன் நாடு முழுவதும் பெற்ற மொத்த வாக்கு களிலும் இரண்டாம் இடத்திலேயே இருந்தது.

| 2024 செப்ரெம்பர் பொதுத்தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகள் | |
|---|---|
| லிபரல் கட்சி | 32.62% |
| பழமைவாதக்கட்சி | 33.74% |
| புளக்குவிபெகுவா கட்சி | 7.64% |
| புதிய ஜனநாயகக் கட்சி | 17.82% |
| பசுமைக்கட்சி | 2.33% |

கனடாவில் தற்போது நடைமுறையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறை "First Past the Post" எனப்படும். இம்முறை மூலம் ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் அதிகூடிய எண்ணிக்கை யான வாக்குகளைப் பெறும் வேட்பாளரே அத்தொகுதியில் வென்றவராகக் கருதப்படுவர். இம்முறை மூலம் ஒருவர் அத்தொகுதியில் பெரும்பான்மை வாக்கு களைப் பெறாமலே அத்தொகுதியில்




போட்டியிட்ட மற்ற வேட்பாளர்களைவிட அதிக வாக்குகளை எடுத்தால் வெற்றி பெறுகிறார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வது ஜனநாயகமுறை அல்ல எனக்கூறும் ஒரு குழு கனடியத் தேர்தல் முறையை விகிதாசாரத் தேர்தல் முறைக்கு மாற்ற வேண்டும் எனத் தீவிரமாக பிரசாரம் செய்து வருகிறது. இவர்கள் "மிக நீண்ட வாக்குச்சீட்டுக்குழு" என்ற ஓர் அமைப்பை 2015ஆம் ஆண்டில் உருவாக்கி தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் அளவுக்கு அதிகமான வேட்பாளர்களை பதிவு செய்ய வைத்து தமது எதிர்ப்பை தற்போதைய தேர்தல் முறைக்குத் தெரிவித்து வருகின்றனர். இம்முறை பழமைவாதக் கட்சியின் தலைவர் Pierre Poilievre போட்டியிடும் ஒட்டாவாவில் உள்ள Carleton தொகுதியில் இவ் அமைப்பு 83 பேரை சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிட வைத்துள்ளது. இத்தொகுதி யில் போட்டியிடும் ஏனைய 8 கட்சிகளின் வேட்பாளர்களுடன் சேர்த்து இத்தொகுதி யில் 91 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற னர். இங்குதான் மிகவும் நீளமான வாக்குச்சீட்டு அச்சடிக்கப்பட உள்ளது. அத்துடன் இத்தொகுதியில் வாக்குகளை எண்ண அதிகநேரம் எடுக்கும் எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"அரசியல்வாதிகள் தேர்தல் விதிகளுக்குப் பொறுப்பேற்கக் கூடாது. தங்களை ஆட்சிக்குக் கொண்டுவரும் ஒருமுறையை அவர்கள் மாற்ற மாட்டார்கள். அதனாலேயே நாங்கள் நீண்டவாக்குச் சீட்டுக்களை உருவாக்குவதன்மூலம் எதிர்ப்பு தெரிவிப்பதுடன் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வைக் கொண்டுவர முயல்கி றோம்" என மிக நீண்ட வாக்குச் சீட்டுக் குழுவின் தலைவர்களில் ஒருவரான Tomas Szuchewycz என்பவர் City News ஊடகத்திற்குத் தெரிவித்தார். ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போது "எங்களிடம் போதிய அளவு மக்களும் பணவசதியும் இல்லாத படியால்தான் ஏனைய கட்சித்தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் அதிக எண்ணிக்கையில் வேட்பாளர்களை பதிய வைக்க முடியவில்லை" என Tomaz Szuchewycz தெரிவித்தார். இத் தொகுதியைவிட ஒரு தொகுதியில் போட்டி யிடும் வேட்பாளர்களது அதிகூடிய எண்ணிக்கை 11 ஆகும். 15 தொகுதி களில் அதிகுறைந்த வேட்பாளர்களாக மூவர் போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடப் பதிவு செய்ய வேண்டிய இறுதிநாளாக ஏப்ரல் 7ஆம் திகதி இருந்தது. நாடு முழுவதிலும் உள்ள மொத்தமான 343 தொகுதிகளிலும் சுயேட்சை வேட்பாளர் களுடன் சேர்ந்து மொத்தமாக 1,959பேர் போட்டியிடுகின்றனர் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

லிபரல் கட்சி 343 தொகுதிகளில் 342 தொகுதிகளில் மட்டுமே வேட்பாளர்களை நியமித்துள்ளது. அல்பேட்டா மாகாணத் தில் உள்ள Ponoka-Didsbury தொகுதி யில் லிபரல் கட்சி நியமித்த வேட்பாளரான Zarnab Zafar என்பவர் நியமனம் தாக்கல் செய்யும்போது லிபரல் கட்சியைச் சேர்ந்தவர் என பதிவதில் தவறு நிகழ்ந்துள்ளது. இதனால் அவர் ஒரு கட்சியும் சாராதவராகவே தேர்தலில் போட்டியிடுகிறார். இங்கு வேறு ஒருவரையும் லிபரல் கட்சி நியமிக்காமல் இவருக்கே தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

பழமைவாதக்கட்சியும் 343 தொகுதிகளில் 342 தொகுதிகளில் மட்டுமே வேட்பாளர் களை நியமித்துள்ளது. குவிபெக் மாகாணத்தின் குவிபெக் நகரின் மத்தியில் உள்ள Quebec Centre தொகுதியில் வேட்பாளரின் விண்ணப்பத்தில் தவறு இருந்ததால் பழமைவாதக்கட்சியின் வேட்பாளரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

புதிய ஜனநாயகக் கட்சியும் 343 தொகுதிகளில் 342 தொகுதியில் மட்டுமே வேட்பாளர்களை நியமித்துள்ளது. நோவா ஸ்கோசியா மாகாணத்தில் உள்ள South Shore-St.Margarets தொகுதியில் புதிய ஜனநாயகக்கட்சியால் நியமிக்கப்பட இருந்த வேட்பாளர் இறுதிநேரத்தில் தனது சொந்தக்காரணங்களுக்காகப் போட்டியிடு வதிலிருந்து விலகியதால் வேறு ஒருவரையும் இங்கு புதிய ஜனநாயகக் கட்சி நியமிக்கவில்லை.

பசுமைக்கட்சி 343 தொகுதிகளில் 232 தொகுதியிலும் கனடாவின் மக்கள் கட்சி எனப்படும் People's Party of Canada (PPC) 247 தொகுதிகளிலும் போட்டியிடு கின்றன. புளக்குவிபெக்குவா கட்சி எனப்படும் குவிபெக் மாகாணத்தைச் சேர்ந்த கட்சி குவிபெக் மாகாணத்தில் உள்ள 78 தொகுதிகளிலும் போட்டியிடு கிறது. ஏனைய பதிவு செய்யப்பட்ட பத்துக் கட்சிகள் ஒரு சில தொகுதிகளிலேயே தமது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. சுயேட்சை வேட்பாளர்கள் 177 தொகுதி களில் போட்டியிடுகின்றனர்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்












Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 2




# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Asking $899 K
Separate Entrance

Morningside | Sewells

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Sale

2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old Pickering
Asking $649,900

Vishal Sarda *
Call : 416 629 1973

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## Office Unit for Sale

GTA Square
Finch Avenue /
Middlefield
Main Floor Unit
Busy Mall
Under ground Parking
$279k

Matt Nadarajah *
Call : 416 960 6130

## Condo for Rent

2BR / 2WR
805 SF

Pickering $2550

Casey Woo *
Call : 647 801 6770

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / HWY 401

Tridel Building

Gulshan Sharma **
Call : 416 407 5911

## House for Sale

Detached Scarboro
4 BR + 2BR
7 Wash Rooms
Custom Build Basement
Finched Washroom
Kitchen
Walk - up
(Kennedy / Sheppard)

Rajiv Agnihotri *
Call : 416 930 0684

To Join
HomeLife/GTA
Realty Inc.
Call at :
416 321 6969
Email:
gtarealty@gmail.com
*One of the Best Brokerage in East Toronto.*

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph *
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 4



# மோடியின் பயணம் சர்ச்சையானது ஏன்?

## – அரவின் –

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு 3 நாட்கள் பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருக்கிறார்.

அவர் 2014ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராகப் பதவிக்கு வந்தபிறகு கொழும்புக்கு மேற்கொண்ட நான்காவது பயணம் இது.

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவரது முதலாவது பயணம் இடம்பெற்றது. அப்போது அவர் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் பயணம் மேற்கொண்டிருந்தார்.

2017ஆம் ஆண்டு சர்வதேச வெசாக் தினம் கொண்டாடப்பட்டதை முன்னிட்டு மீண்டும் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்ட அவர், அப்போது, கண்டிக்கும் சென்று மலையகத் தமிழருடன் உறவுகளை பலப்படுத்தினார்.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு இலங்கையின் பொருளாதாரமும், சுற்றுலா பயணத் துறையும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தன.

இலங்கை பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதான கருத்து சர்வதேச அளவில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில், ஒரு நாள் பயணமாக இந்தியப் பிரதமர் மோடி கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டு இருந்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவர், கொழும்பில் தங்கிருக்க விரும்பாதமைக்கு, பாதுகாப்பு சார்ந்த அச்சுறுத்தல்தான் காரணம்.

அதற்குப் பின்னர் கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடி என பல்வேறு சிக்கல்களுடன் கடந்து போய்விட்டன.

இப்போது, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கின்ற இந்தியப் பிரதமர் மோடி, இந்தமுறை அனுராதபுரத்திற்கும் சென்று வழிபாட்டில் ஈடுபட்டிருக்கிறார்.

சிறிமாபோதியில் வழிபாடு செய்த மோடி, அனுராதபுர அட்டமஸ்தானாதிபதியான பௌத்த தேரர் முன்பாக, முழங்காலிட்டு வணங்கியிருந்தார். அது சிங்களப் பாரம்பரிய வழிபாட்டு முறை.

முதல்முறை அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு செல்வதற்கு விரும்பி இருந்தார். ஆனால் நல்லூர் கந்தன் ஆலயம் எந்த தலைவர்களுக்காகவும் தனது விதிமுறைகளை மாற்றுகின்ற ஆலயம் அல்ல.



ஆலயம் வழக்கமாக திறக்கப்பட்டிருக்கும் நேரத்திலேயே அங்கு தரிசனம் செய்ய முடியும்.

இந்தியப் பிரதமர் என்பதற்காகவோ, இலங்கை ஜனாதிபதி என்பதற்காகவோ அவர்கள் நினைத்த நேரம், கோயில் கதவை திறந்து தரிசனம் செய்ய முடியாது. அதேபோல ஆண்கள் மேலங்கி அணியாமல், வேட்டியுடன்தான் சென்று வழிபாடு செய்ய வேண்டும். அதற்கு இந்தியப் பிரதமர் மோடி தயாராக இருக்கவில்லை. அதனால், இந்திய தூதரக அதிகாரிகள் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு இந்தியப் பிரதமரை அழைத்துச் சென்று வழிபாடு செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

நல்லூர் கந்தனிடம் மேலங்கியை அகற்றி விட்டு தரிசனம் செய்ய மறுத்த இந்தியப் பிரதமரே, அனுராதபுரத்தில் சிங்கள மரபுக்கு அமைய, பௌத்த தேரரிடம் மண்டியிட்டு வணங்கியிருந்தார்.

இந்தமுறைப் பயணத்தின்போது, திருகோணமலைக்குச் சென்று சம்பூரில் சூரிய சக்தி மின்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவார், திருக்கோணேஸ்வரம் சென்று வழிபடுவார் என கூறப்பட்டது. ஆனால், அந்தப் பயணம் இடம்பெறவில்லை. கொழும்பில் இருந்தபடியே அந்த கட்டுமானப்பணிகளை ஆரம்பித்து வைத்திருந்தார்.

யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டிக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் மோடி, கிழக்கிற்கு ஏன் பயணம் மேற்கொள்ளாமல் தவிர்த்தார்?

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அந்தப் பயணம் இடம்பெறவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

நாட்டில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி இருக்கிறோம், அதனால்தான் இந்தியப் பிரதமர் எந்த அச்சமும் இல்லாமல் இங்கே வருகிறார் என ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க கூறியிருந்தார். ஆனால் அவர் அச்சமில்லாத சூழலில் பயணத்தை மேற்கொண்டார் என சொல்வதற்கில்லை. ஏனென்றால் அவரது பயணத்தின்போது, பெருமெடுப்பிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கொழும்பு துறைமுகத்தில் இந்திய கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று தரித்திருந்தது. இந்திய பிரதமரின் பயணத்திற்கென நான்கு ஹெலிகொப்டர்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர்களை அவர் பயன்படுத்தவில்லை.

இந்தியப்பிரதமரின் பயணங்களுக்காக, குண்டுதுளைக்காத ரேஞ்ச் றோவர் வாகனங்கள் கொண்டுவரப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

40இற்கும் அதிகமான விமானப்படையினர் கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தில் தரித்து நின்றனர். ஏராளமான சிறப்பு கொமாண்டோக்களும், புலனாய்வாளர்களும் முகாமிட்டிருந்தனர்.

இலங்கைப் படைகளால் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என நம்பியிருந்தால், இந்தளவு பெரிய பாதுகாப்புகளுடன் அவர் இப்பயணத்தை மேற்கொண்டிருக்க மாட்டார்.

அதைவிட திருகோணமலைக்கான பயணத்தை ரத்து செய்திருக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்காது.

இந்தியப் பிரதமர் தனது பயணத்தை கொழும்புடன் நிறைவு செய்துகொண்டு திரும்பி இருக்கவில்லை. அவரது கடைசி பயண நிகழ்வுகள் அனுராதபுர ரயில் நிலையத்திலேயே இடம்பெற்றன. அத்துடன் அவரது பயண நிகழ்ச்சிநிரல் முழுமையடைந்ததும், அனுராதபுரவில் இருந்து, நேரடியாக இராமேஸ்வரத்துக்குப் புறப்பட்டு சென்றார்.

இந்திய விமானப்படையின் ஹெலிகொப்டரில் அனுராதபுரம் விமானப்படைத் தளத்திலிருந்து அவர் புறப்பட்டுச் சென்றபோது, ஜனாதிபதி அனுகுமார திசநாயக்க வழியனுப்பி வைத்திருந்தார்.

அனுராதபுரவில் விமானப்படைத் தளம் ஒன்று இருக்கிறது. ஆனால் அது ஒரு சர்வதேச விமான நிலையம் அல்ல. அங்கு கடவுச்சீட்டுக்களை பரிசோதிப்பதற்கு அல்லது குடிவரவு குடியகல்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எந்த வசதியும் இருக்கவில்லை.

இந்தியப் பிரதமர் மோடி அனுராதபுர விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு செல்வதற்கு ஏற்ற வகையில், அன்று ஒரே ஒரு நாள், அந்த விமானப்படைத் தளம், சர்வதேச விமான நிலையமாக வர்த்தமானி அறிவித்தலின்மூலம் அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்று விட்டு, தாய்லாந்தில் இருந்து கொழும்பு வந்து இறங்கிய இந்தியப் பிரதமர் தனது பயணத்தின் இரண்டாவது நாள் முழுவதையும், சந்திப்புகளுக்காகவும் கலந்துரையாடல்களுக்காகவும் ஒதுக்கியிருந்தார். அன்று காலை அவருக்கு சுதந்திர சதுக்கத்தில் வரவேற்பளிக்கப்பட்டிருந்தது.

சுதந்திர சதுக்கம் தனியே சுதந்திர தினத்தன்று கொடியேற்று நிகழ்வுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

தனிப்பட்ட நிகழ்ச்சிகள், அரசாங்க நிகழ்ச்சிகளுக்குக்கூட அது பயன்படுத்தப்படுவதில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

வேறெந்த நாட்டின் தலைவருக்கும் அங்கு வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றதில்லை. இதுதான் முதல்முறையாக நடந்து இருக்கின்ற நிகழ்வாகும். அதனால் இது இந்திய பிரதமருக்கு வழங்கப்பட்ட உச்ச கௌரவம் என இந்திய ஊடகங்கள் சில கொண்டாடித் தீர்க்கின்றன.

அதேபோல இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க, சிறிலங்கா மித்ர விபூசண என்ற உயர் கௌரவ விருதை வழங்கி கௌரவித்தார்.

வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் அளிக்கப்படுகின்ற அதிஉயர் விருது இது. 2008ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த காலத்தில், இந்த விருது அறிமுகம் செய்யப்பட்டது.

அப்பொழுது முதல்முறையாக இந்த விருதைப் பெற்றவர் மாலைதீவின் ஜனாதிபதி மாமுன் அப்துல் கயூம்.

அவருக்குப் பிறகு, 2014ஆம் ஆண்டு பலஸ்தீனத்துக்கு பயணம் மேற்கொண்ட மகிந்த ராஜபக்ச, பலஸ்தீன அரசின் தலைவர் முகம்மட் அப்பாஸுக்கும் மறைந்த யாசிர் அரபாத்திற்கும் இந்த விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இந்த மூவரும் மிகப்பெரிய நாடுகளின் தலைவர்கள் அல்ல. சர்வதேச அளவில் அரபாத் மதிப்புக்குரியவராக இருந்தாலும், அவர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாட்டினது அதிகாரபூர்வ தலைவராக இருக்கவில்லை. இவர்களுக்கு வழங்கப்பட்ட விருது, இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்டிருப்பதை பெரிய விடயமாகக் கருத முடியாது. ஆனால் இந்த விருதை இந்தியத்தரப்பு மிகப்பெரிய கௌரவமாகப் பார்க்கிறது.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

35ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கனடிய மத்திய.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

2021ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் 60இற்கு மேற்பட்டோர் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

### லிபரல் கட்சியின் கொள்கைகளில் சில:

* கனடிய மக்களின் குறைந்தபட்ச வருமானவரி வரம்பை 15%இல் இருந்து 14%ஆகக் குறைத்தல்.

* முதல் முறையாக $1 மில்லியனுக்குக் குறைவான புதிய வீடு வாங்குவோருக்கு GST வரியை நீக்குதல்.

* கனடாவில் ஆண்டுதோறும் கட்டப்படும் புதிய வீடுகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல் மூலம் ஆண்டுக்கு 500,000 வீடுகள் கட்டுதல்.

* CBC மற்றும் அதன் Radio Canada (பிரெஞ்சு மொழி) ஊடகத்துறைக்கு வருடந்தோறும் வழங்கும் அரச உதவி நிதியை $150 மில்லியனால் அதிகரித்தல்.

* நுகர்வோர் காபன் வரியை நீக்கி ஆற்றல் திறன் கொண்ட சாதனங்கள் (Energy Efficient Appliances), மின்சாரத்தால் இயங்கும் வாகனங்கள் போன்ற பசுமையான தேர்வு களை மேற்கொள்வோருக்கு வெகுமதி அளிக்க ஊக்கத்தொகை முறையை உருவாக்கல்.




### பழமைவாதக்கட்சியின் கொள்கைகளில் சில:

* கனடிய மக்களின் குறைந்தபட்ச வருமானவரி வரம்பை 15%இல் இருந்து 12.75%ஆகக் குறைத்தல்.

* $1.3 மில்லியனுக்கு குறைவான புதிய வீடுகள் வாங்கும் அனைவருக்கும் GST வரியை நீக்குதல்.

* எண்ணெய் குழாய்கள் அமைத்தல் மற்றும் சுரங்கத் தொழில் போன்ற வளங்களைப் பெருக்க உதவும் திட்டங்களை விரைவுபடுத்த சுற்றுச்சூழல் மதிப்பீட்டுச் சட்டத்தை இரத்துச் செய்தல்.

* Radio Canada (பிரஞ்சு மொழி) ஊடகத்துறையை பராமரிப்பதுடன் CBC ஆங்கில மொழி ஊடக சேவைக்காக அரசு வழங்கும் நிதியுதவிகளை நிறுத்தல்.

* நுகர்வோர் காபன் வரியை நீக்கு வதுடன் தொழில்துறை மீதான காபன் வரியையும் நீக்குதல்.

### புதிய ஜனநாயகக்கட்சியின் கொள்கைகளில் சில:

* கனடாவில் தயாரிக்கப்படும் வாகனங் களுக்கான GST வரியை முற்றாக நீக்குதல் மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் தமது அரச பாவிப்புக்கு கனடிய தயாரிப்பு வாகனங்களை மட்டுமே வாங்க அனுமதி அளித்தல்.

* அடுத்த 10 ஆண்டுகளில் 100,000இற்கு மேற்பட்ட வாடகைக் கட்டுப்பாட்டு வீடுகளைக் கட்ட அரசிற்கு சொந்தமான காணிகளை வழங்குதல்.

* நாடு முழுவதும் உள்ள 3.3 மில்லியன் வீடுகளை மறுசீரமைக்க உதவுதல்.

* வாடகைக் கட்டுப்பாட்டை கடைப் பிடிக்கும் மாகாணம் மற்றும் நகர சபைகளுக்கு மட்டுமே மத்திய அரசு வீடுகட்ட நிதி உதவி வழங்குதல்.

* $20 மில்லியனுக்கு மேல் சொத்து உள்ள செல்வந்தர்களுக்கு 1% மேலதிக வரி விதித்தல்.

### கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் இலங்கை வம்சாவளித் தமிழர்:



Gary Anandasangaree
Liberal Candidate Scarborough–Guildwood–Rouge Park

ஹரி ஆனந்தசங்கரி லிபரல் கட்சி வேட்பாளராக Scarborough - Rouge Park தொகுதியில் போட்டியிடுகிறார். இவர் 2015ஆம் ஆண்டில் இருந்தே லிபரல் கட்சியின் சார்பில் இந்த தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். இவர் லிபரல் கட்சியின் அரசில் அரச பூர்வீக குடிகள் உறவுகள் மற்றும் வடக்கு விவகார அமைச்சராகவும், நீதி அமைச்சரும் மற்றும் கனடாவின் சட்டமா அதிபராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Juanita Nathan
Liberal Candidate Pickering–Brooklin

ஜுனிற்றா நாதன் லிபரல் கட்சி வேட்பாள ராக Pickering-Brooklin தொகுதியில் போட்டியிடுகிறார். மார்க்கம் நகரில் நீண்ட காலமாக வாழும் ஜுனிற்றா நாதன் தற்போது மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டார உறுப்பினராகப் பதவி வகிக்கிறார். இவர் 2022ஆம் ஆண்டில் நகரசபை உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட முன்னர் 2010ஆம் ஆண்டிலிருந்து மூன்று முறை தொடர்ந்து பொதுப்பாடசாலை சபையின் உறுப்பினராக இருந்தவர். இவர் தமிழ் கனடிய பாரம்பரியத்தை சேர்ந்த பொதுப்பணிப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல்பெண்மணி ஆவார்.



Lionel Loganathan
Conservative Candidate Markham-Thornhill

லயனல் லோகநாதன் பழமைவாதக் கட்சியின் வேட்பாளராக Markham-Thornhill தொகுதியில் போட்டியிடுகிறார். இவர் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பொது மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றிவரும் ஓர் அனுபவமிக்க தொழில்முனைவர் ஆவார். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக மாணவர்களை கணிதத்தில் வலுவானவர்களாக மாற்ற உதவும் மென்பொருளை அமைத்து கனடா மற்றும் உலகளாவிய பாடசாலை களுக்கு வழங்கி வருகிறார்.



Niran Jeyanesan
Conservative Candidate Markham—Stouffville

நிரன் ஜெயனேசன் பழமைவாதக் கட்சியின் வேட்பாளராக Markham-Stouffville தொகுதியில் போட்டியிடுகிறார். இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக காவல்துறை அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். சமூக உறுப்பினர்களுடன் வலுவான உறவைக் கொண்டுள்ள இவர், தேவாலயத்தில் இளைஞர் முயற்சிகளை வழிநடத்துபவராகவும், தவறான வழியில் செல்ல முற்படும் இளைஞர்களுக்கு சரி யான வழிகாட்டலை செய்து வருபவருமாகவும் இருக்கிறார்.



Sarun Balaranjan
Green Candidate Etobicoke North

சருண் பாலரஞ்சன் பசுமைக்கட்சியின் சார்பில் Etobicoke North தொகுதியில் போட்டியிடுகிறார். இவர் மருத்துவ மாணவ ராக McMaster பல்கலைக்கழகத்தில் பயின்று தற்போது Michael G.Degroote School of Medicineஇல் பயிற்சி பெற்று வருகிறார். சுகாதார சமத்துவம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மருத்துவர்கள் சங்கத்துடன் (CAPE) சேர்ந்து பணியாற்றியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட ஐவரும் இலங்கைத் தமிழரின் பரம்பரையில் கனடிய மத்திய அரசின் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

### கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் இந்திய வம்சாவளித் தமிழர்:

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 67 பேர் இம்முறை கனடிய மத்திய அரசின் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என The Times of India தகவல் தெரிவித்துள்ளது. இவர்களில் 17பேர் லிபரல் கட்சியிலும், 28பேர் பழமைவாதக்கட்சியிலும், 10பேர் புதிய ஜனநாயகக்கட்சியிலும், 4பேர் பசுமைக்கட்சியிலும் மற்றும் 8 பேர் கனடா வின் மக்கள் கட்சியிலும் போட்டியிடுகின்றனர்.

தொடர்ச்சி 07ஆம் பக்கம்



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 6



# மோடியுடனான தமிழ்ப் பிரதிநிதிகளின் சந்திப்பு பயனற்றதா?

**– முகிலன் –**

கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கின்ற வாய்ப்பு தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்கு கிடைத்திருக்கிறது.

கடைசியாக, 2019ஆம் ஆண்டு ஒரு நாள் பயணமாக நரேந்திர மோடி கொழும்புக்கு வந்திருந்தபோது, தமிழ் கட்சிகளின் தலைமைகளை மிகக் குறுகிய நேரம் சந்தித்து பேசியிருந்தார்.

அதற்குப் பின்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறவும், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்தவும், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தவும், தமிழ் தேசிய கட்சிகள் முயற்சிகளை முன்னெடுத்திருந்தன.

அந்த முயற்சிகள் வெற்றியளிக்காமலேயே இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் காலமானார்கள்.

இப்பொழுது இந்தியப் பிரதமருடனான சந்திப்பில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சி.வி.கே.சிவஞானம், சிறிதரன், சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் பங்கேற்றிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பின்போது அவர்கள் சமஷ்டி முறையிலான தீர்வே தமிழரின் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என வலியுறுத்தியதாகக் கூறியிருந்தனர்.

13ஆவது திருத்தச்சட்ட அமலாக்கமும் மாகாண சபைத் தேர்தலும் அவர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த சந்திப்பின்போது இந்தியாவிற்கும் தமது கட்சிக்கும் இடையிலே இருக்கின்ற சுமுகமற்ற உறவை சமநிலைப்படுத்த முயன்றிருக்கிறார்.

இந்தியா தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாடு பற்றிய சில தவறான அபிப்பிராயங்களை, இந்தியப் பிரதமரிடம் எடுத்துக்கூறி உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள முனைந்திருக்கிறார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதில் தமக்கு பொறுப்பு இருக்கிறது என்பதையும் அவர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இந்தியாவைத் தவிர வேறொருவர் இலங்கையில் தலையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தில் தாங்கள் உறுதியாக இருப்பதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டிருக்கிறார்.



இப்படியே 45 நிமிடச் சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது.

அப்படியானால், இந்தியப் பிரதமரை சந்தித்துள்ளதன் மூலம் தமிழ் கட்சிகள் எதனை அடைந்திருக்கின்றன? தமிழ் மக்களுக்கு என்ன பயன் கிடைத்திருக்கிறது? என்பது கேள்விகளாக இருக்கின்றன.

ஏனென்றால், தமிழர் தரப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பிரச்சினைகளைச் சொல்வதும், தீர்வைப் பெற்றுத் தருமாறும், அதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்துகின்ற விடயங்கள் கடந்த 10 ஆண்டுகளாக நடந்து கொண்டே இருக்கின்றன.

2015ஆம் ஆண்டு, மோடியை முதல் முறையாக தமிழ் தலைவர்கள் சந்தித்த போது, சமஷ்டி முறையிலான தீர்வுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், தமிழ் மக்கள் நிலையான ஒரு தீர்வுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி இருந்தனர். மீண்டும் 2017ஆம் ஆண்டு அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டபோதும், அவ்வாறே கேட்டுக் கொண்டனர்.

2019ஆம் ஆண்டு அவர் வந்தபோதும் அதே கோரிக்கைதான் விடுக்கப்பட்டது.

ஆனால், இந்திய பிரதமரோ இந்திய அரசாங்கமோ இந்தக் கோரிக்கைகள் பற்றி எந்த நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் விடயத்தில், இந்தியா இராஜதந்திர ரீதியான அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய நிலையில் இல்லை.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், இந்த விடயத்திலிருந்து இந்தியா இன்னும் அதிகம் பின்வாங்குவதாகத் தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்க இருந்தவரை, 13ஆவது திருத்தச்சட்டம் பற்றியும் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும், இந்தியா பகிரங்கமாக வலியுறுத்தியது. ஆனால், இப்பொழுது இலங்கையின் அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே சொல்கிறது.

மாகாணசபைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படும் என இந்தியா எதிர்பார்க்கிறது என, யாருக்கும் வலிக்காத வகையில், கூறுகிறது.

தமிழர் தரப்பிடமிருந்து இந்தியா விலகிச் செல்கிறது என்பதைப் புரிந்து கொள்வது கடினம் அல்ல.

அப்படியானால், தமிழ்ப் பிரதிநிதிகள் இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையற்றவர்களாக மாறி இருக்கின்றனரா?

ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கத்தையும் சரி, அதற்குப் பின்னர் வந்த அரசாங்கங்களையும் சரி சமாளிப்பதற்கு, அவற்றுக்கு நெருக்கடி கொடுத்து காரியத்தை சாதிப்பதற்கு, ஏதோ ஒருவகையில் தமிழ்ப் பிரதிநிதிகளை இந்தியத் தலைவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

இந்தியாவின் இந்த மறைமுகமான நகர்த்தல்களின் ஊடாக, புதுடெல்லிக்குத் தேவையான காரியம் கொழும்பின் ஊடாக நிறைவேற்றப்பட்டது.

இப்பொழுது அப்படியான நிலை இல்லை. தமிழரை அது இப்போது கையாளுவதும் இல்லை, தமிழரின் நலன்களையிட்டு இந்தியா அக்கறைப்பட்டுக் கொள்ளவும் இல்லை.

இந்த நிலையை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருக்கின்றனர் போல் தெரிகிறது.

ஆனாலும் இந்தியாவை நழுவவிடக் கூடாது என்பதற்காக, இந்தியா எங்களை கைகழுவி விட்டு விட்டது என்பதை வெளிப்படுத்தக்கூடாது என்பதில், அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். அப்படிச் செய்தால், இந்தியா இன்னமும் விலகிச் சென்று விடும்.

அதைவிட தமிழரின் அரசியலுக்கு விரோதமான நகர்வுகள் முன்னெடுக்கப்படும் ஆபத்தும் உள்ளது.

இப்படி ஒரு சிக்கலான காலகட்டத்தில், இந்தியப் பிரதமரைச் சந்தித்த தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளால், ஆக்கபூர்வமான ஒரு பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை இருக்கவில்லை.

இந்தியப் பிரதமரைச் சந்திப்பது வெறும் சம்பிரதாயபூர்வமான ஒரு நிகழ்வாக மாறி விட்டது. இவ்வாறான சந்திப்பு என்பது, இந்தியாவுக்கும் தமிழருக்கும் பரஸ்பரம் நன்மை அளிக்கும் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். நட்புபூர்வமாக அது அமைந்திருக்க வேண்டும். ஆனால், இந்த விடயங்களை, இச் சந்திப்பு எந்தளவுக்குப் பூர்த்தி செய்திருக்கிறது?

தமிழ் தலைவர்கள் இந்தியாவின் நலன்களை எவ்வாறு கையாளுவது என்ற விடயத்தில், தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் இந்த விடயத்தில் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது.

ஏனென்றால் தமிழரின் நலன்களை இந்தியா புறக்கணித்து ஒதுக்குகின்ற சூழல் ஏற்படுமேயானால், அது இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் மிகப்பெரிய தேக்க நிலையை ஏற்படுத்தும்.

எந்தவொரு சிங்களத் தலைவர்களும் தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வில் அக்கறை கொண்டதில்லை.

தமிழருடன் உரிமைகள், மற்றும் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கோ, தமிழரருக்கு அவற்றைப் பகிர்ந்து கொடுப்பதற்கோ விரும்பியதில்லை.

இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கூட விதிவிலக்கான ஒன்று அல்ல. இப்படிப்பட்ட அரசாங்கத்தை கவனமாகக் கையாள வேண்டிய நிலையில் தமிழர் தரப்பு இருக்கிறது.

அதிலும் இந்தியத் தரப்பின் அழுத்தங்கள் குறைந்து வரும் சூழலில் தமிழ்த் தரப்பின் மீது சிங்களத் தலைமைகளும் வேண்டாவெறுப்பாகவே நடந்து கொள்ளும்.

அவர்கள் சந்தர்ப்பத்தை சாதகமாக்குவதற்கு முனைவர். இந்தப் பேராபத்துச் சூழலைத் தமிழ்த் தலைவர்கள், எதிர்கொள்வதற்கு எந்த வகையிலாவது தயாராக இருக்கின்றனரா?

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228

Mr.S.F.Xavier (Teacher)

Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 7



# செயற்கை நுண்ணறிவும் கற்பனை மற்றும் படைப்பாற்றலின் வீழ்ச்சியும்

**யதுசனா**

அண்மைக் காலங்களில் AI என அழைக்கப்படும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) பிரமிக்கத் தக்க வளர்ச்சி கண்டு நாளாந்த வாழ்வின் ஏறத்தாழ அனைத்து விடயங்களிலும் தனது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது.

தொழிற்துறை, கல்வி, மருத்துவம், போக்குவரத்து மற்றும் கலைத்துறை என்பவற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திவரும் இத்தொழில்நுட்பத்தின் தன்னியக்கமாக தொழிற்படும் திறன், கணிப்புக்களின் துல்லியத்தன்மை, வினைத் திறன், இலகுவாகக் கையாளும் தன்மை என்பன இன்றைய கடுகதி யுகத்தின் ஒரு வரப்பிரசாதம் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இல்லை. ஆனால் ஒரு நாணயத்திற்கு இருக்கும் இரு பக்கம் போல விஞ்ஞானத்தின் உச்ச படியாகப் பார்க்கப்படும் இந்நவீன தொழில்நுட்பமும் பிரதிகூலங்களை எசுமந்து வரவும் தவறவில்லை.

அப்படி என்ன தீங்கு இதனால் ஏற்பட்டு விடப் போகின்றது எனப் பார்த்தால், பிரதானமாக மனிதனின் சிந்தனையையும் படைப்பாற்றலையும் மழுங்கடிக்கும் நிலை இந்த விரல் நுனியிலேயே அனைத்து வேலைகளையும் செய்ய உதவுகின்ற விஞ்ஞானத்தின் உச்சத்திற்கு இருக்கின்றது. இசை, ஓவியம், எழுத்து, வடிவமைப்பு என கலை சார் துறைகளில் வியாபகம் பெற்றுள்ள செயற்கை நுண்ணறிவு, ஒரு சொல்லை மட்டுமோ அல்லது சொற்கோர்வையையோகொண்டு எதிர்பார்க்கும் விடயத்தை வினாடிகளில் செய்துமுடித்து விடுகின்றது. இது நன்மை தானே. இதில் என்ன பாதிப்பு இருந்து விடப் போகின்றது என நினைத்தோமாயின், பல ஆண்டுகள் தம் காலத்தை செலவழித்து திறன்களைக் கற்று, தம் நேரத்தையும் உழைப்பையும் மூலதனமாக வைத்து படைப்புக்களை மேற்கொள்ளும் கலைஞர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

கையையும் தாம் கற்ற திறனையும் மூலதனமாக்கி படைப்புக்களைக் மேற்கொண்டுவந்த மனிதர்களின் திறமைக்கு இயந்திரங்கள் மாற்றீடாக அமையும் நிலைமைக்கு அச்சுறுத்தப்படுகின்றனர். இது ஒருவரின் தனித்துவமான புத்தாக்க சிந்தனையை மழுங்கடிப்பதுடன் மனிதரின் உழைப்பு அவசியமில்லை என்ற நிலைக்கும் அழைத்துச் செல்லக்கூடியது.




மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளுக்கு சிந்தித்து எழுதும் பழக்கத்தை இழந்து சுலபமான வழிகளை நாடி, முற்றாக செயற்கை நுண்ணறிவிலேயே தங்கி இருப்பது அவர்களின் திறன் வளர்ச்சியை மழுங்கடிக்கின்றது. பாட ரீதியான ஆய்வுகள், எழுத்தாக்கம், சிந்தனைத்திறன் வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட வழி வகுக்கும். கல்வித்துறையில் மட்டுமன்றி, இயந்திரமயமாக்கப்பட்டு வரும் வேலைச் சூழலும் மனிதனுக்கு ஒரு வகையில் சவாலாகவே இருக்கின்றது. நிறுவனங்களின் வாடிக்கையாளர் சேவைகள், விளம்பரம் போன்ற பகுதிகள் முற்றாக AI மயமாக்கப்படுவது மனிதரின் வேலை வாய்ப்புக்கும் சவால் கொடுக்கின்றது.

பொருளாதார ரீதியான அச்சுறுத்தல் மட்டுமன்றி தனிமனித பாதுகாப்புக்கும் செயற்கை நுண்ணறிவு சவால் மிக்க சூழலை ஏற்படுத்துகின்றது என்றால் நம்ப முடிகின்றதா? ஆம், எமது தேவைகளை நிறைவேற்ற நாம் உள்ளிடுகின்ற தரவுகள் பாதுகாக்கப்படுகின்றதா?. நாம் பதிவேற்றம் செய்கின்ற ஒவ்வொரு தரவும் AI கருவிகளால் சேகரிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் மனிதனின் தனிமனித உரிமை கேள்விக்கு உள்ளாகுகின்றது.

அறிவுத் தேடலுக்காக நூல்களையும் சிந்தனையையும் நம்பி இருந்த காலம் போய், விரல் நுனிக்கே அனைத்து விடயத்தையும் எடுத்துவரும் செயற்கை நுண்ணறிவு, மனிதனின் தன்னம்பிக்கையை மழுங்கடிக்கின்றது. சிறு விடயங்களில் முடிவெடுப்பதற்குக்கூட AIஇன் ஆலோசனையை நாடியே ஓடுகின்றனர். நம் சுய விருப்பங்களை விடுத்து உயிரற்ற இச்செயற்கை நுண்ணறிவின் ஆலோசனைக்கமைய இயங்கி வருகின்றோம் என்பது இக்கால நிதர்சனம். AI பயன்படுத்தும் தரவுகளின் பாகுபாட்டுத் தன்மை அவற்றின் தவறான ஆலோசனைகளுக்கு வழிவகுக்கக் கூடியது. மேலும் இன்றைய காலத்தில் பிரபலமாகி வரும் உரையாடலுக்கான AI செயலிகள் சில சமயங்களில் மனிதரை தவறான வழியில் செல்லவும் தூண்டக் கூடியது. இயந்திரமயமாக்கப்பட்ட இன்றைய சூழலில், உளவியல் ரீதியான தாக்கங்கள் பெருமளவில் காணப்படுகின்றது. மனஅழுத்தம், தனிமை என வருந்துவோர் பலரும் செயற்கை நுண்ணறிவுமூலமாக தீர்வினைத் தேடுவதை அவதானிக்கலாம். இதனை ஒருவகையில் வரப்பிரசாதமாகக் கருதிய போதிலும் உறவுகளிடையே பெரும் இடைவெளியை ஏற்படுத்தி உணர்வுகளற்ற தனி உலகிற்கு மனிதனை அழைத்துச் செல்கின்றது. இது மேலும் மேலும் தனிமையில் வருந்தச் செய்வதுடன் நிரந்தர தீர்வினை கொடுத்துவிடப் போவதில்லை.

AIஇன் மிகப் பிரதானமான பிரதிகூலமாகக் காணப்படுவது மனித உழைப்பின் மதிப்பிழந்து போவதேயாகும். ஒரு நூலில் இருக்கும் விடயங்களை இன்னோர் இடத்தில் பயன்படுத்துகையில், அந்நூலாசிரியரை மேற்கோள் காட்டுவது அவரது உழைப்பிற்குக் கொடுக்கும் மரியாதை. இல்லையேல் அது அறிவியல் திருட்டு என கருதப்படுகின்றது. செயற்கை நுண்ணறிவின் மூலமான படைப்புக்களிலும் ஏறத்தாழ இதே நிலைமையே. இதற்கு உதாரணமாக அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை குறிப்பிடலாம். உலகில் பரந்த அளவில் பயன்பட்டு வருகின்ற OpenAI செயலியில் பிரபலமான "Ghibli Trend" இதுவாகும். நாம் பதிவேற்றுகின்ற புகைப்படங்களை புகழ்பெற்ற ஜப்பானிய அசைவூட்டத் திரைப்பட கலை வடிவமான "Ghibli style"இற்கு மாற்றித் தருதலே இச்செயலி மேற்கொண்ட செயல். அனைவரும் இச்செயலியின் வினைதிறனில் மெய்மறந்து இருக்கும் வேளையில், "Ghibli" கலை வடிவத்தை உருவாக்கிய ஹயாவோ மியாஸாகி(Hayao Miyazaki) செயற்கை நுண்ணறிவு வரைதல் கலையில் ஏற்படுத்தும் தாக்கம்பற்றி சில வருடங்களின் முன்னர் பேசிய விடயங்கள் சிந்திக்க வைக்கின்றன. செயற்கை நுண்ணறிவின் மூலம் உருவான படைப்புக்கள் வாழ்க்கைக்கு செய்யும் அவமதிப்பு எனவும் மனித வேதனைகளையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ள முடியாதது எனவும் இவர் குறிப்பிட்டுள்ளார். பல மாதங்களாக திறமையையும் கைவண்ணத்தையும் மூலதனமாகக் கொண்டு உருவான இக் கலைப்படைப்பின் பாணியில் செயற்கை நுண்ணறிவுச் செயலிகள் படங்களை உருவாக்கி வருவது காப்புரிமமற்ற உழைப்புத் திருட்டாக அமைவதுடன் பாரம்பரிய கலைத்திறனைக் கொண்டு ஆக்கங்கள் புரிகின்ற கலைஞருக்கு அவமரியாதையுமாகும்.

இதுமட்டுமல்ல, எழுத்து, வடிமைப்பு, மற்றும் அனைத்துவித AIஐ அடிப்படையாகக்கொண்ட செயற்பாடுகளின் போதும் மனிதனின் உண்மையான உணர்வுகளும் அடையாளமும் அற்றுப் போகின்றது. படைப்பாற்றலும் அதன்பால் உள்ள உரிமமும் என அனைத்தும் இயந்திரத்தின் கையிலேயே அர்ப்பணித்து விட்டு வெறும் பயனர்களாகவே மனிதன் இருப்பது அர்த்தமற்றது.

இவ்வாறாக செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு பற்றி பலதரப்பட்ட கருத்துக்கள் இருந்தபோதிலும் அதன் பிரதிகூலங்களை இழிவளவாக்கி புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவது மனிதனின் கைகளிலேயே உள்ளது. AI ஒரு சக்தி வாய்ந்த விடயமாக இருக்கலாம். ஆனால் அது மனிதனை மாற்றக்கூடாது. கலைஞர்களின் படைப்புக்கான அங்கீகாரம் பேணப்படுதல், மாணவர்களுக்குத் தேடல் மற்றும் பயிற்சி மூலமான கற்றல் முறையை ஊக்குவிப்பது முதற்கொண்டு பொருளாதார மற்றும் பாதுகாப்பு விடயங்களிலும் செயற்கை நுண்ணறிவு மனிதனின் முன்னேற்றத்திற்கு தடங்கலை ஏற்படுத்தாதவாறு சமநிலையைப் பேண வேண்டும்.

AI தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்தும் நிலை மாறி அது நம்மைப் பயன்படுத்தும் நிலைக்கு வழிவகுக்கக் கூடாது. நாம் எவ்வளவு தூரம் தொழில்நுட்பத்தால் முன்னேறுகின்றோம் என்பது முக்கியமல்ல அதனை எந்த வழியில் பயன்படுத்தகின்றோம் என்பதில்தான் முக்கிய சவால் உள்ளது. இத்தகைய நிலை தொடருமேயானால் எதிர்காலத்தில் மனிதனின் உணர்வு ரீதியான, பண்பாட்டு ரீதியான அடையாளங்கள் மற்றும் சமூகம் சார்ந்த விடயங்கள் என அனைத்தும் இயந்திரங்களின் கைவண்ணத்திலேயே இருக்கும்.

எனவே செயற்கை நுண்ணறிவை நாம் ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும், எம் நாளாந்த வாழ்வை தீர்மானிக்கும் இயக்கியாக அல்ல. மனித வலுவிற்கு உரிய மதிப்பினை வழங்க வேண்டும். தொழில்நுட்பம் என்பது மனித சமூகத்தின் நலனுக்காக இருக்க வேண்டுமே தவிர மனிதர்களின் இயல்பு வாழ்வை மாற்றி மேலும் சிக்கல்படுத்துவதற்கு அல்ல. சிந்தித்து செயற்படுவோம்.

## கனடிய மத்திய.....

05 ஆம் பக்கத்தொடர்ச்சி

அனிதா ஆனந்த் லிபரல் கட்சியின் சார்பில் Oakville East தொகுதியில் போட்டியிடுகிறார். இவர் 2019ஆம் ஆண்டில் இருந்தே லிபரல் கட்சியின்



Anita Anand
Liberal Candidate Oakville East

சார்பில் இந்த தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். இவர் லிபரல் கட்சி அரசில் புத்தாக்கம், விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை அமைச்சராக பதவி வகித்தார். இதற்கு முன்னர் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகவும், தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் மற்றும் பொது சேவைகள் மற்றும் கொள்முறை அமைச்சராகவும் பணியாற்றி உள்ளார்.

பல ஊடகங்களின் கருத்துக் கணிப்புகளின்படி கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செல்வாக்கு மக்களிடையே எவ்வாறு உள்ளது என்பதை CBC ஊடகம் கணித்து தனது இணைய தளத்தில் ஏப்ரல் 14ஆம் திகதி வெளியிட்டுள்ளது.

| CBC ஊடகக்கருத்துக்கணிப்பு | |
|---|---|
| கட்சி | வாக்கு (%) |
| லிபரல் கட்சி | 44.0 |
| பழமைவாதக்கட்சி | 37.8 |
| புதிய ஜனநாயகக் கட்சி | 8.7 |
| புளக்குவிபெகுவா கட்சி | 5.1 |
| பசுமைக்கட்சி | 2.4 |
| கனடாவின் மக்கள் கட்சி | 1.5 |

Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 8



## நாமும் நமது இல்லமும் 676

# ஆதன விலை எங்கே செல்கிறது?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் மார்ச் 2025இல் ஏற்பட்ட வியாபாரம் முப்பது (30) வருடங்களிற்கு முன்பாக (1995இல்) ஏற்பட்ட நிலைமையைபோல் இன்றும் அமைந்துள்ளது. கடந்த முப்பது வருடங்களில் ஏற்றத்தை தொடர்ச்சியாகக் கொண்டுவந்த ஆதன வியாபாரம் (விற்பனை) இப்பொழுது 30 வருடங் களிற்கு முந்தைய நிலைமையை அடைந்தது, பலராலும் எதிர்பார்க்காதது. 2020இல் ஏற்பட்ட ஆதன முடக்கத்திற்கு கொரோனோ பெருந்தொற்று புறக்காரணி காரணமாக இருந்தது. ஆனால் இன்றைய நிலைமை, தனிப்பட்ட ஒருவரினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே அதிக வட்டிவீதம் அரசின் கொள்கைகளால் வியாபாரத்திலும் விலையிலும் இறக்கம் ஏற்பட்டு வந்தது. இதனை ஊக்குவிப்ப தாகவே அமெரிக்க அதிபரின் செயற்பாடு இருந்து வருகின்றது. இதனால், கனடியர் களின் மனநிலை, ஆதனக் கொள்வன வில் முடிவெடுப்பதில் நிச்சயமற்றுக் காணப்படுகின்றது.

விற்பவர்கள் தொடர்ந்து ஆதனங்களை சந்தைப்படுத்தியே வருகின்றனர். இதனால் ஆதன சந்தையில் அதிக ஆதனங்கள் விற்பனைக்காகக் காத்திருக்கின்றன.

குறிப்பாக 2021இலும் 2022இன் ஆரம்பத் திலும் வாங்கியவர்களின் ஆதனத்தின் இன்றைய பெறுமதி குறிப்பிட்டளவு குறைந்தே காணப்படுகின்றது. எனினும், 20-30 வருடங்களிற்கு முன்பாக ஆதனம் வாங்கியவர்கள் சிறப்பான நிலையில் காணப்படுகின்றனர். இவர்கள் இதற்கு பிற்பாடு பிழையான முடிவுகளை எடுத்து ஆதனங்கள் வாங்காமல் இருந்திருந்தால்;

உதாரணமாக பெப்ரவரி 2025இன் வியாபாரம் ஜனவரி 2025உடன் ஒப்பிடும் போது 28.3% குறைந்துள்ளது. ஆனால், மார்ச் 2025ஐ பெப்ரவரி 2025உடன் ஒப்பிடும்போது 2.4% மட்டுமே குறைந்துள்ளது.

எனினும், மார்ச் 2025இல் 9.6% அதிக மான ஆதனங்கள் பெப்ரவரி 2025 உடன் ஒப்பிடும்போது சந்தைப்படுத்தப்பட்டது.

பொதுவாகக் கூறினால், 2025இன் முதல் மூன்று மாதங்கள் 2024இன் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடும்போது ஆதன வியாபாரம் சிறப்பாகக் காணப்படவில்லை. எனினும் ஆதன நிலைப்பாட்டில் ஒரு சிறப்பான விடயம் எனக் கூறினால், கனடிய வட்டிவீதமும், அடமானக்கடனின் வட்டிவீதமும் குறிப்பிட்டளவு குறைந்துள்ளது.

| Year | Bank Rate | Prime Rate |
|---|---|---|
| 2024 March | 5% | 7.2% |
| 2025 March | 2.75% | 4.95% |

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் நீண்ட காலமாக ஆதன நிர்மாணத்தில் சிறப்பாக இயங்கும் நிறுவனம் எதிர்வரும் 12 மாதங்களிற்குப் புதிய அடுக்குமனை கட்டிடத்தொகுதியை சந்தைப்படுத்துவ தில்லை என்று தெரிவித்துள்ளது. இந் நிறுவனம் ஆதன வியாபாரம் உச்சத்தில் இருக்கும்போது வருடத்திற்கு 2000இற்கு மேற்பட்ட மனைகளை விற்பனை செய்திருந்தது.

அத்துடன் இவர்களின் கையில் விற்பனைக்கு இருக்கும் 300இற்கு மேற்பட்ட மனைகளை (ஏறக்குறைய $500 மில்லியன் பெறுமதி) விற்பதிலேயே முனைப்புக் காட்டுகின்றன.

பெரிய நிறுவனங்களிற்கே இந்நிலைமை எனின், சிறிய நிர்மாண நிறுவனங்களின் நிலைமையைப்பற்றி குறிப்பிடத் தேவை இல்லை.

இது மட்டுமல்ல, இந்நிறுவனங்கள் சிறப்பு சலுகை விலையில் விற்பதற்கும் முயற்சி செய்கின்றன. இந்த வருடம், தொடர்ச்சி யாகக் கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப் படும் அடுக்கு மனைகளினால் அதிக புதுமனைகள் சந்தைக்கு வந்துகொண்டு இருக்கின்றன. இதில் 70%இற்கு மேற் பட்டவை முதலீட்டாளர்களினாலேயே கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. இந்தக் காரணத்தால் வாடகைக்கு அதிகளவான மனைகள் இருப்பதால், வாடகை களின் பெறுமதியும் இறங்கி வருகின்றது.

வாடகையாளர்களிற்குரிய அதிக சலுகை யினால் முதலீட்டாளர்கள் ஆதனத்தில் முதலிடுவதிலும் பின்நிற்கின்றனர். அத்துடன் புதிய வரவாளர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது.

வாடகைக்கு தகுந்தவர்களை தேர்ந்து எடுப்பதுவும் இலகுவல்ல.

எனினும் 2026ஆம் ஆண்டிற்கும் அதற்கும் அப்பால் புதிய அடுக்குமாடி மனைகள் எண்ணிக்கை குறையும் என்பது நிதர்சனம்.

என்னுடைய அபிப்பிராயத்தின்படி, முதல் தடவையாக ஆதனம் வாங்குவோருக்கு இது சிறந்த காலமாகக் கொள்ளலாம். இதற்குக் காரணம், குறைந்த வட்டி வீதம் ஆதனத்தின் விலையில் ஏற்பட்ட குறிப்பிட் டளவு இறக்கம். அத்துடன் வாங்குபவர்கள் விற்பவர்களுடன் திறமையாகப் பேரம்

| | |
|---|---|
| 2024இல் கட்டி முடிக்கப்பட்டCondo Units 29,800 | |
| 2025இல் கட்டி முடிக்கப்படும் Condo Units 30,793 | |

பேசக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. மேலும், வாங்குபவரின் பொருளாதார மற்றும் தொழில் நிலைமை முறையாக இருந்தால், இரண்டு வருமானம் தரக் கூடிய ஆதனங்களைக் கருத்தில் கொள்வது பொருளாதார ரீதியில் சிறப்பை உருவாக்கும். சில சந்தர்ப்பங்களில் முதலீட்டாளர்களும் இதனைச் சிந்திக்கலாம்.

ஒரு வீட்டில் தனித்னியாக வாழக்கூடிய இரு அலகுகள் காணப்பட்டால் அதனை இரண்டு வருமானம் கொண்ட ஆதனமாகக் கொள்ளலாம்.

# மோடியின்...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

நரேந்திர மோடி பிரதமர் பதவிக்கு வந்த பிறகு, 75 நாடுகளுக்கு 87 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்.

அவருக்கு பல்வேறு நாடுகள் இதுபோன்ற உயர் விருதுகளை கொடுத்திருக்கின்றன. இலங்கையிடம் பெற்றுக் கொண்ட விருது, அவர் பெற்ற 25ஆவது விருதாகும்.

இந்தியப் பிரதமரின் பயணத்தின்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதனை இந்தியா மிகப்பெரிய சாதனையாகக் கருதுகிறது.

முதல்முறையாக இலங்கையுடன் இத்தகைய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருப்பதாக வும் கூறியிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் வாய்திறக்கவில்லை. அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் இல்லை, சமர்ப்பிக்கப் போவதுமில்லை.

இப்படியான நிலையில் இந்த ஒப்பந்தம் சம்பந்தமான கடுமையான விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தொடர் குற்றச்சாட்டுகளை அடுத்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்தியாவுடன் நாங்கள் செய்துகொண்டது பாதுகாப்பு உடன்படிக்கை அல்ல, அது ஒரு புரிந்துணர்வு உடன் படிக்கைதான் எனக் கூறியிருக்கிறார்.

இதுவரை காலமும் இந்தியாவுடன் இருந்த பயிற்சிகள், கூட்டு ஒத்துழைப்பு போன்ற விடயங்களை, எழுதப்பட்ட ஒப்பந்தமாக மாற்றியிருக்கிறோம், அவ்வளவுதான் என அவர் குறிப்பிட்டிருக்கிறார்.



ஆனால் இந்தியாவோ, தரையில் மாத்திர மல்ல, கடலிலும்கூட இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்துவதற்கு அனுமதிக் காத வகையில், இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக கூறுகிறது.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக வன்முறையில் இறங்கிய இந்திய எதிர்ப்பை மோசமான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திய ஜேவிபி, இன்று இந்தியாவுடன் கைகுலுக்கிக் கொண்டிருக்கிறது. ஒப்பந்தம் செய்திருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடுமையான விமர்சனங்களை சந்தித்துக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணம்.

Get in touch for your perfect home!
PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215


Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 9



# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன?

**உஷா மதிவாணன்**

## Life Coaching

உலகின் மிகசக்தி வாய்ந்த மனிதர்களாக இருப்பினும், இந்த சமூகத்தின் மிக அடிமட்டத்தில் வாழக்கூடிய மனிதர்களாக இருப்பினும், அனைவருக்கும் வாழ்க்கை மிகுந்த சவால்களை கொண்டதாகவே உள்ளது.

இச்சவால்கள் அனைவரது வாழ்க்கையிலும் அவர்களது மன நிலையை மிகுந்த சங்கடங்களுக்கு உள்ளாக்கிக் கொண்டே இருக்கிறது. அவநம்பிக்கை, இயலாமை, செல்லும் திசை தெரியாத தடுமாற்றம், குழப்பம், இவற்றினால் உண்டாகும் சங்கடங்கள் ஆகியவற்றினால் நாம் அனைவரும் சூழப்பட்டு இருக்கிறோம். இவற்றிலிருந்து வெளிவரும் நுட்பமும் புரியவில்லை.

உலகத்துடனும், சக மனிதர்களுடனும் நமது அன்றாட உறவுகளின் தொடர்புக்கு மட்டுமல்லாமல், நமது தனிப்பட்ட வாழ்க்கையின் அமைப்புக்கும் நமக்கு ஒரு சீரான, சமநிலையிலுள்ள மனநிலை தேவைப்படுகிறது. தனிநபரின் தவறான நடத்தை நமது சமூக மற்றும் சமூக வாழ்க்கையின் நல்லிணக்கத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். தனிநபர்கள் தங்கள் சொந்தத் தவறுகளை அடையாளம் காணக் கற்றுக்கொடுக்கவும், அவர்களின் சமூக சூழலுடன் இணக்கமாக வாழ வழி காட்டவும், மனித இயல்பை நன்கு புரிந்து கொள்ளும் நோக்கில் மனித குலத்தின் முன்னேற்றத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் பணிக்கு மனோதத்துவம், தத்துவம், மனநல மருத்துவம், ஆன்மீகம், மதங்கள் போன்ற மானுடத்தை முன்னேற்ற செயல் படும் அனைத்து துறைகளில் உள்ளவர் களும் முயன்றுகொண்டே இருக்கின்றனர்.

இத்துறைகளின் பல்வேறு பிரிவுகளும், முன்னோடிகளும், வல்லுனர்களும் பல விதமான ஒழுங்கு மற்றும் வழிமுறைகளை கண்டுபிடித்து அவற்றை மக்களுக்கு உபயோகப்படும் விதமாக முன் வைக்கின்றனர்.

இந்தத் துறைகளில் இருக்கும் பலவித மான நுட்பங்களையும் வழிமுறைகளையும் உபயோகப்படுத்தி வாழ்வை, நல்வாழ்வாக மாற்றுவதற்குப் பயிற்சி அளிக்கும் முறை கடந்த 30 வருடங்களாக உருவாகி வந்துள்ளது. அதுதான் நல்வாழ்வு பயிற்சி (Life Coaching) என்பதாகும்.

இப்பயிற்சியானது நிரூபிக்கப்பட்ட மன நோய்களுக்கு (மனச்சோர்வு, அழுத்தம், அதீத அச்சம், மனப்பிறழ்வு, போதைப் பழக்கம், தற்கொலை எண்ணம்...) சிகிச்சை அளிக்கும் முறை அல்ல.

நல்வாழ்வு பயிற்சி என்பது ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் இருக்கக்கூடிய மனப்போராட்டங்களை அதனால் அவன் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களை ஆராய்ந்து பயிற்சியாளரும், அம்மனிதனும் ஒன்றாக இணைந்து அவற்றை நேர் செய்து, முடிந்தவரை அவனது சிக்கல் களை முடிவுக்கு கொண்டுவரும் ஒரு பயிற்சியாகும்.

நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளையும், செய்முறைகளையும் கொண்டு இதற்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. உலகெங்கிலும் மிக வேகமாக வளரும், வளர்ந்து வரும் ஒரு தொழிலாக இந்நல்வாழ்வு பயிற்சி பார்க்கப்படுகிறது.

மக்களின் பிரச்சினைகளை கூர்ந்து கேட்டல், அவர்களுடைய நோக்கினை கூர்மைப்படுத்துதல், மிகவும் நேர்மையான கருத்துகளையும், பின்னூட்டங்களையும் வழங்குதல் போன்ற இன்றியமையாத கருவிகளைப் பயன் படுத்தி முதலில் சம்பாஷணைகளை முறைப்படுத்துதல் என இப்பயிற்சி தொடங்குகிறது. பிறகு பிரச்சினைகளின் மையப் புள்ளிகளை நோக்கிச் சென்று, கூர்மையான, தெளிவான பதில்களை வரவழைக்கும் கேள்விகளை பயிற்சியாளர் கேட்கிறார், அவர்களின் கடந்த காலத்தைத்தெளிவாக, படிப்படியாக அறிந்துகொண்டு அவற்றில் அவர் எதிர் கொண்ட பிரச்சினைகளை சரியாகப் புரிந்துகொள்கிறார். பின்னர் அவற்றின் தீர்வுக்கான வழிமுறைகளையும், அது குறித்த வாடிக்கையாளரின் எண்ணங்களையும் அறிந்து கொள்கிறார். அவற்றைச் செயல்படுத்த, அவர்களின் ஒத்துழைப்புடன் பயிற்சியளிக்க ஆரம்பிக்கிறார். வாடிக்கையாளர் எதிர் கொள்ள வேண்டிய மாற்றங்களை அவரது வாழ்க்கையில் நிதர்சனப்படுத்த அவர் துணையோடு கட்டமைக்கிறார். அவரது வாழ்வின் அடிப்படையான நோக்கங்களை, இயல்புகளை, முயற்சிகளை, இலட்சியங் களை, தேவைகளைக் கண்டு, உணர உதவுகிறார். ஒவ்வொரு வாடிக்கையாளரின் பிரச்சனைகளுக்கு ஏற்ப இந்தப் பயிற்சி முறைகள் மேலும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு அவருக்கும் வழங்கப் படுகின்றன. இந்தப் பயிற்சி உறவின் நோக்கம் நிறைவேறும்வரை, இப்பயிற்சிகள் முறையாக ஒழுங்காக வாடிக்கையாளரால் பின்பற்றப்படுகின்றனவா என்பதைத் தொடர்ந்து பயிற்சியாளர் கண்காணிப்பார். அவற்றை முறைப்படுத்திக் கொண்டே இருப்பார்.

பல்வேறு உளச்சிக்கல்களை எதிர் கொண்டு வாழும் நமது சமூகத்திற்கு இந்த நல்வாழ்வுப் பயிற்சியின் அவசியத்தை எடுத்துரைக்கும் ஒரு சிறு முன்னோட்டமே இக்கட்டுரையாகும்.

உஷா மதிவாணன் M. A (Social Work)
அலைபேசி: **647.808.2904**

---

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை
மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- சிவகுமார் -**

"என் குழந்தைகள் வளர்ந்து விட்டனர்"
"நான் தனிமையில் நின்றுவிட்டேன்!"

விரித்த படுக்கை விரிப்பில்
கசங்கல் இல்லை இப்போது.
அங்கும் இங்கும் சிதறிக்கிடக்கும்
துணிகளும் இல்லை இப்போது.
ரிமோட்டுக்கான சண்டை
ஏதும் இல்லை இப்போது.
புதிய புதிய உணவு கேட்டு
ஆர்ப்பாட்டமும் இல்லை இப்போது.



"என் குழந்தைகள் வளர்ந்து விட்டனர்.
நான் தனிமையில் நின்றுவிட்டேன்!"

காலையில் எழுந்ததும்
உள்ள பரபரப்பு
நேரம் இல்லை இப்போது!
வீடே பெரிதாய் விசாலமாய்



தோன்றுது இப்போது!
ஆனாலும் எந்த அறையிலும்
உயிரோட்டம் இல்லை இப்போது!
நகர்த்தினாலும் நகர மறுக்குது
நேரம் இப்போது!
குழந்தைப் பருவ நினைவு
படமாய் சுவரில் தொங்குது இப்போது!

"என் குழந்தைகள் வளர்ந்து விட்டனர்.
நான் தனிமையில் நின்று விட்டேன்!"

முதுகில் சாய்ந்து யாரும் கழுத்தை
கட்டுவதில்லை இப்போது!
குதிரை ஏறி சவாரி செய்ய
முதுகை வளைக்கும் வேலை
இல்லை இப்போது!
உணவு ஊட்ட நிலாவும்
வேண்டியதில்லை இப்போது!
உணவு ஊட்டியபின் மனதில்
தோன்றும் ஆனந்தமும்
இல்லை இப்போது!
தினமும் வரும் விவாத விளக்கத்திற்கு
வாய்ப்பில்லை இப்போது!
போடும் சண்டையை
விலக்கிடும் ஆனந்தமும்
இல்லை இப்போது!
மகிழ்ச்சியில் கிடைக்கும்
அன்பு முத்தமும்
இங்கே இல்லை இப்போது!

"என் குழந்தைகள் வளர்ந்து விட்டனர்.
நான் தனிமையில் நின்றுவிட்டேன்!"

'கண் இமைப்பதற்குள் வாழ்வின்
பொற்காலம் ஓடித்தான் போனது'
அழகான அந்த வசந்தம்
எப்போது கரைந்ததோ?
மழலை மொழியில்
வழிந்த ஆனந்தமும்,
நொடிச் சிரிப்பும், அழுகையும்,
முதுகில் தட்டித் தந்து,
மடியில் கிடத்தி, தோளில்
சாய்த்து தாலாட்டு பாடி,
தூங்கச் செய்து அடிக்கடி
விழித்து, கலைந்த போர்வை
சீராய் போர்த்திய காலமும்,
நிலைமையும் இல்லை இப்போது!
படுக்கும் கட்டிலும் விசாலமாய்
தோன்றுது இப்போது!
அன்புக் குழந்தைகளின்
இனிய குழந்தைப் பருவம்
எங்கோ தொலைந்து விட்டது!
பள்ளிக்கு அழைத்துச்சென்ற
வருடங்களை
நினைக்காத நாளில்லை!

"என் குழந்தைகள் வளர்ந்து விட்டனர்.
நான் தனிமையில் நின்றுவிட்டேன்!"

தன் காலுறையை எவரும்
அங்கும் இங்குமாய்
எறிவதில்லை இப்போது!
நாற்காலிக்கு போட்டி அப்போது!
ஆனால் அவை அசைவின்றி, ஆளில்லா
வீடுபோல் நிற்கிறது.
குளியலறையும் ஈரமில்லாமல்
உலர்ந்து கிடக்கிறது இப்போது!
சமையலறையோ அமைதி
மண்டிக் கிடக்கிறது இப்போது!
காலை மாலை தவறாமல்
உடல்நலம் பற்றி
அலைபேசியில் விசாரிப்பு.
"நான் ஓய்வுடன் நலம் பேண,
ஆயிரம் அறிவுரை தருகின்றனர்
இப்போது."

அன்று நான் அவர்களின்
சண்டை விலக்கி வைத்தேன்.
இன்று அவர்கள் எனக்கு
அறிவுரை சொல்கின்றனர்.
"நான் குழந்தையாகி விட்டதை
உணர்கிறேன் இப்போது!"

"என் குழந்தைகள் வளர்ந்து விட்டனர்
நான் தனிமையில் நின்று விட்டேன்!"

"யாரோ ஒருவர் எழுதியது! இன்று இவை எனக்கு!
நாளை இவை உங்களுக்கு! நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்."
'வாழ்க்கையை ரசித்து அனுபவியுங்கள்'.

Vlambaram - April 15, 2025 new.qxp_Vlambaram-Front 2025-04-14 7:06 PM Page 10



# நானிலம் போற்றும் நட்பு - 64



– அகணி –
authorakani@gmail.com

இன்னாநாற்பது என்ற நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நூலினை இயற்றியவர் கபிலதேவர். இந்த உலகத்திற்குத் தகாதவை பற்றி நாற்பது செய்யுள்களில் கபிலதேவர் எடுத்துரைத்துள்ளார். பொருள், கல்வி, புலனடக்கம் இல்லாதவிடத்து மனிதர்களாகிய நாங்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் பற்றி எடுத்துரைப்பதே இன்னாநாற்பது. இதுமட்டுமன்றி கணவன் மனைவி உறவு, பெற்றோர் பிள்ளைகள் உறவு, நட்பு ஆகியற்றில் இன்னாதவை எவையென்றும் எடுத்தியம்புவது இன்னாநாற்பது.

இப்பொழுது இன்னா நாற்பதின் எட்டாவது செய்யுளிற்குச் செல்வோம்.

"பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு."

இந்தச் செய்யுளில் 'நகை' என்ற சொல் 'சிரித்தல்' என்றவாறும், 'நெஞ்சத்தார்' என்ற சொல் 'மனமுடையார்' என்றவாறும் கருதவேண்டும் என்று உரையாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

"பகல் போலும் நெஞ்சத்தார்" என்று புலவர் வெள்ளை உள்ளம் கொண்டவர்களை அல்லது நல்ல மனம் கொண்டவர்களைக் குறிப்பிடுகின்றார். இப்படிப்பட்ட நல்ல மனிதர்களின் பண்பில் ஒரு சிறு குறை இருந்தாலும் துன்பத்திற்குரியது. நல்ல மனம் மட்டும் இருந்தால் போதுமா. அது செயலில் வெளிப்படவேண்டும். ஒருவரின் பண்பு என்பது அவரின் செயற்பாட்டால் ஏற்படும் பிறரின் அபிப்பிராயம். ஒருவரின் நல்ல எண்ணங்கள் நல்ல செயற்பாடுகளாக மாறினால்தான் பயனுண்டு என்ற கருத்தைப் புலவர் கபிலர் அழகாக "பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா" என்று கூறுகின்றார்.

"நகையாய நண்பினார் நாரின்மை யின்னா" என்ற செய்யுளின் அடியின் மூலம் "சிரித்துக் குலாவுகின்ற நண்பர்களிடையில் அன்பில்லாது இருத்தல் துன்பத்திற்குரியது" என்று புலவர் கூறுகின்றார். வெளியில் சிரித்து நடிப்பாக இருக்காது உண்மையான அன்புடன் நட்பு இருக்க வேண்டும் என்ற அறிவுரை இக்காலத்திலும் தேவையான ஒன்று ஆகும். மனிதர் எல்லோரும் நீதியுடையோராக இருத்தல் வேண்டும். நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் நீதியானதா என்று எங்களை நாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். நீதியில்லாத மனம் உடையவர்களுடன் கொள்ளும் நட்பு துன்பத்திற்குரியது என்ற கருத்தை "நயம் இல் மனத்தவர் நட்பு" என்ற செய்யுளின் இறுதியடியில் தெரிவித்து நீதி நிலைக்க வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் புலவர். இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி எண்பத்தி ஆறாம் பாடலைக் கவனிப்போம்.

இது, ஒக்கூர் மாசாத்தி என்னும் புலவர் பாடியது. இவர் புலமை நிறைந்த பெண்மணி. தலைவன் வராமை கண்டு வருந்திய தலைவி தோழியிடம் தன் துயரத்தைச் சொல்லியது. இது முல்லைத்திணை சார்ந்தது.

தலைவி தனித்திருக்கிறாள். கார் காலத்திலே வந்துவிடுவேன் என்று சொல்லிச் சென்ற காதலன் இன்னும் வரவில்லையே என்று கவலை கொண்டிருந்தாள். அவள் கவலையைக் கண்டு அவளுடைய தோழியும் துக்கமடைந்தாள். இவ்வளவு கடுமழையிலும் காதலன் வராததைக் கண்டு அவளுக்கு அடக்க முடியாத துன்பம். அவளால் தலைவிக்கு ஆறுதல் மொழி சொல்லவும் தோன்றவில்லை. இதைக் கண்ட தலைவி, தன் துக்கத்தைத்தானே தோழியிடம் சொல்லுகின்றாள்.

"ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த, முல்லை மென் கொடி,
எயிறு என முகைக்கும், நாடற்குத்,
துயில் துறந்தனவால் தோழி என் கண்ணே."

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

